*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – VII (1)
December - 2022

# சூழலியற் பெண்ணிய நோக்கில் சுகிர்தராணி கவிதைகள்

கணேஷ்வரி, ப.
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
ஸ்ரீ கிருஷ்ணசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மேட்டமலை, சாத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding author: pganeshwari89@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் இலக்கிய மரபில் பாடுபொருளை நயம்பட எடுத்துரைக்கும் ஒரு வடிவம் கவிதை ஆகும். தற்கால எழுத்தாளர்களுள் சுகிர்தராணி ஒரு கவிஞராக, சமூகப் போராளியாக அடையாளப்படுத்துபவர். சமூகத்தில் விளிம்புநிலையில் வாழும் மக்களின், குறிப்பாகப் பெண்களின் பிரச்சினைகளுக்குத் தனது கவிதைகளின் வழி தீர்வு காண்பவர். சமகாலத்திய உயிர்ப்புள்ள கவிதைகளை உரத்த குரலில் பதிவுசெய்பவர். தமிழ்ச் சூழலில் பல்வேறு வகையான பெண்ணியம் பேசப்பட்டு வருகிறது. சூழலியற் பெண்ணியம் என்பது இயற்கையைப் பெண்களுடன் தொடர்புபடுத்திப் பேசுவது. இயற்கையும் பெண்ணும் வேறுவேறு அல்ல என்கிற தத்துவத்தை உணர்த்துகிறது. உற்பத்தி சக்திகளாக (ஆக்க சக்தி) பெண்மையும் இயற்கையும் சுகிர்தராணி கவிதைகளில் ஒருசேரப் பேசப்படுகிறது. மனிதனுக்கும் சூழலுக்கும் ஆழமான உணர்வை ஏற்படுத்தும் கவிதைகள் அதிகம். சங்க இலக்கியங்களைப் பசுமை இலக்கியம் என்பர். பெண் உடல் சில கவிதைகளில் பூமியோடு தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகிறது. நிலம், வளமை, வறட்சி எனச் சூழல்சார்ந்து பெண்களுக்கான வலிகளை சுகிர்தராணி கவிதைகளில் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**குறிப்புச் சொற்கள்: சூழலியல், பெண்ணியம், உடலுலகு, பசுமை இலக்கிய மரபு. ஆக்கசக்திகள், புறக்கணிப்பு.**

## முன்னுரை

கைப்பற்றி என் கனவு கேள், இரவு மிருகம், அவளை மொழிபெயர்த்தல், தீண்டப்படாத முத்தம், காமத்திப்பூ ஆகிய கவிதை நூல்களின் வழிப் பெண்ணுரிமை, சமூக சமத்துவ விடுதலை, பெண் அரசியல் ஆகியவற்றிற்காகச் சமீப காலமாக உரத்த குரல் எழுப்புபவர் கவிஞர் சுகிர்தராணி. கவிஞரும் எழுத்தாளருமான இவர் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். தற்போது தமிழ் ஆசிரியராக இராணிப்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றி வருகிறார். சமூக அரசியல் தளத்தில் களச் செயல்பாட்டாளராக

இயங்கும் இவருக்கு 'சுந்தர ராமசாமி விருது', புதுமைப்பித்தன் நினைவு விருது எனப் பல விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. தீவிர முனைப்புடன் பெண் மொழி சார்ந்தும், உடல் சார்ந்தும், சமூக ஒடுக்குமுறை சார்ந்தும் வீரியம் மிக்க கவிதைகளால் புரட்சி செய்யும் பெண்மணி இவர். புத்தகங்கள் புரட்சி செய்ய வேண்டும்; கவிதைகள் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்பதற்கேற்ப இவரது கவிதைகள் வாசகரைக் கிளர்ச்சி செய்யக் கூடியவை. சூழலியற் பெண்ணிய நோக்கில் கவிஞர் சுகிர்தராணியின் கவிதைகளை இக்கட்டுரை ஆராய்கிறது.

**சூழலியலும் பெண்ணியமும்**

உலக நாடுகள் அனைத்திலும் பெண் கல்வி மற்றும் பெண் சுதந்திரம் பேசப்பட்டுவருகிறது. 'Feminism' என்னும் இலத்தீன் சொல்லுக்குப் ''பெண்ணியம'' என்று பொருள் கொள்ளப்படுகின்றது. பெண்களுக்கான சம உரிமைகளை, பாதுகாப்பை அமைப்பின் வழி, நிலை நிறுத்தும் பொருட்டு உருவான ஒரு கோட்பாடு என்றும் கருத இடமுளது. **"**பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும். தெற்காசிய நாடுகள், பெண்கள் சமூகம், அலுவலகம், குடும்பம் போன்றவற்றில் ஒடுக்கப்படுவது பற்றிய விழிப்புணர்ச்சியையும் அத்தகைய இழிவுபடுத்தும் போக்கினை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயல்படும் தன்மையைப் பெண்ணியம் கொண்டுள்ளது**"**[1] என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்ச் சூழலில் மார்க்சியப் பெண்ணியம், தலித் பெண்ணியம், தேசியப் பெண்ணியம், இந்துமதப் பெண்ணியம், இசுலாமியப் பெண்ணியம், நாத்திகப் பெண்ணியம், மரபுசார் பெண்ணியம், தீவிரப் பெண்ணியம், பின்னைப் பெண்ணியம் எனப் பல வகை உண்டு. சூழலியற் பெண்ணியம் காலத்தையும், இயற்கையையும் பெண்களோடு இணைத்துப் பார்ப்பது. குறிப்பாகப் படைப்புகள் வழி சூழலியற் பெண்ணியத்தை அடையாளம் காண்பதென்பது சாலப்பொருத்தமானது. சூழலியல் வேறு, சூழலியற் பெண்ணியம் வேறு. பெண்ணியம் சார்ந்த படைப்புகளில் இயற்கை குறித்த சொல்லாடல்களை மறு ஆக்கம் செய்து விமர்சிப்பது சூழலியற் பெண்ணியம். இயற்கை மனித சமூகத்தோடு பின்னிப் பிணைந்தது. பிரிக்க இயலாதது. எனவேதான் நம் தொல்பழஞ் சமூகம் திணைசார் பண்பாடுடையதாக இன்றும் அடையாளப் படுத்தப்படுகிறது

**"முதலெனப் படுவது நிலம் பொழுதிரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே"[2]**
**(தொல். பொருள். அகம். நூ.14)**

**"முதல் கரு உரிப் பொருள் என்ற மூன்றே**
**நுவலும்காலை முறைசிறந்தனவே**
**பாடலுள் பயின்றவை நாடுங்காலை"[3]**
**(தொல். பொருள். அகம். நூ.3)**

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் மனித சமுதாயத்திற்கும், கவிதைக்கும், இயற்கைக்குமான பாரம்பரிய உறவை விளக்குவதாய் அமைகின்றன. ''சூழலியற் பெண்ணியம'' என்ற சொல்லை ''தி போனே'' (D Equbonne) என்பவர் 1974 இல் அறிமுகம் செய்து வைத்ததனைத் தொடர்ந்து Susan Griffia வின் Reweaving the world: the emergence of eco feminism

என்ற நூலும் Caldecott and Leland தொகுத்த "women and life on earth: a conference on eco – feminism in the eighties" என்ற நூலும் சூழலியலைப் பெண்களை மையமிட்டு விவாதிக்கக் காரணமாக அமைந்தன. மார்க்சியப் பெண்ணியம், கருப்புப் பெண்ணியம், தலித் பெண்ணியம் போன்று சூழலியற் பெண்ணியம் என்ற கருத்தாக்கம் பரவ இந்நூல்கள் காரணமாக அமைகின்றன."[4] "இயற்கையும் பெண்ணும் வேறுவேறு அல்ல. இரண்டும் ஒன்று. இரண்டையும் ஆண் அடிமைப்படுத்தியதால் தான் அனைத்து விளைவுகளும் ஏற்படுகின்றன. ஆண்களிடமிருந்து இரண்டையும் மீட்டெடுக்க வேண்டும். இயற்கையும் பெண்ணும் அடிப்படையில் ஆக்க சக்திகள் (Creaters). ஆண்கள் இரண்டையும் நசுக்கும் அழிக்கும் சக்திகள் (Terminaters). பெண்கள் உடலின் அமைப்பு பஞ்ச பூதங்களின் பேரமைப்போடு இயல்பாகப் பொருந்துவது"[5] என்று ந.இரத்தினக்குமார் குறிப்பிடுகிறார். சுகிர்தராணி கவிதைகளில் இயற்கையைப் பெண்ணாக அல்லது பெண்ணை இயற்கையோடு தொடர்புபடுத்திப் பேசுவது இயல்பாக அமைந்திருக்கிறது.

**ஆக்க சக்திகள்**

காயத்ரி சல்யைவக், அருந்ததிராய், மகாஸ்வேதாதேவி, வந்தனா சிவா போன்றவர்களின் படைப்புகள் இந்தியச் சூழலில் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. சூழலியற் பெண்ணியத்தை அரசியல் கருவியாகப் பயன்படுத்துபவர்களுள் இவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர். பெண் தலைமையேற்ற தாய்வழிச் சமூகம் மறைக்கப்பட்டு பெண் ஒற்றை நுகர்வுப் பொருளாகப் பார்க்கப்பட்டு பின்னாளில் தந்தைவழிச் சமுதாயமாக மாற்றம் பெற்றது. உடற்கூறு, குழந்தைப்பேறு, புனிதம் என்னும் போற்றுதல் மாயைக்குள் அடக்குமுறையும் நிகழ்ந்தது. கவிஞர் சுகிர்தராணி அனைத்துத் தரப்புப் பெண்களைக் குறித்துப் பேசுவதை விடவும் தலித் பெண்களுக்கான உரிமைகளையும் வலிகளையும் வீரியம் மிக்க சொற்களால் கவிக்கிறார். அவரது நேர்காணல் ஒன்றில் "சமூக அளவில் தலித் பெண் என்கிற காரணத்தினால் புறக்கணிப்புக்கு ஆளாகிறேன் என்றால் என் குடும்பத்துள் பெண் என்கிற காரணத்தினால் அடக்குமுறைக்கு ஆளானேன்"[6] என்று குறிப்பிடுகிறார்.

**துள்ளும் வலியும்**
**மின்னலென வெட்டும் வேதனையும்**
**உச்சமாய் எரிகிற**
**உயிரை அசைத்து**
**இரத்த சகதியில்**
**மீண்டழுத குழந்தையின்**
**துணி விலக்கி**
**பெண்ணென முகம் சுழிப்பவனே**
**அன்று**
**என்மீது பரவியபோது**
**மனம் களித்தவன் நீதானே**

என்ற கவிதை வரிகள் பாலின சமத்துவம், பெண் சிசுக்கொலை, நுகர்வுக் கலாச்சாரம் எனப்பல திரப்புகளை ஏற்படுத்துகின்றன. இந்தக் கவிதையில் பெண்ணானவள் ஒரு ஆக்க சக்தியாகப் பார்க்கப் படுகிறாள். இயல்பாகவே இக்கவிதையில் வரும் மின்னல், எரிகிற மற்றும் சக்தி என்னும் சொற்கள் இயற்கையோடு தொடர்புடைய சொற்களாகும். உயிர்த் தோற்றத்திற்கான மூலக்கூறுகளான நிலம், நீர், வெப்பம் ஆகியவற்றை உணர்த்தும் பஞ்சபூத

சக்திகளாகச் சித்திரிக்கப்படுகின்றன. மேலும்,

**மழைத்துளிகளெனக் கண்களிரண்டும்**
**உருண்டு கொண்டிருக்கின்றன**
**அருவியெனக் கூந்தல்**
**வலிந்து கொண்டிருக்கிறது**
**நதியென உடல்**
**வாழ்வைக் கடந்துகொண்டிருக்கிறது**
**கடலடைந்த கணத்தில்**
**எல்லையற்றதாகிச் சுழல்கிறது**
**உடலுலகு.**

இக்கவிதையும் பெண் உடலை இயற்கையின் பகுதிகளாக விவரிக்கிறது.

**மயிர்கள் சிரைக்காத என் நிர்வாணம்**
**அழிக்கப்படாத காடுகளைப் போல்**
**கம்பீரம் வீசுகிறது.**

அழிக்கப்படாத காடுகள் என்பது சிதைக்கப்படாத பெண்ணுடலின் பரிசுத்தத் தன்மையை கவனப்படுத்துகிறது. பெண் உடல் அரசியல் குறித்துக் குறிப்பிடும் சுகிர்தராணி, ''பெண் உடல் அரசியல் இயக்கம்'' 2000-க்குப் பிறகு தீவிரமடைந்திருந்தது. பாலின சமத்துவமின்மை, பெண்கள் மீதான கலாச்சாரப் பண்பாட்டுச் சமூக அழுத்தங்களைப் பூடகமாகச் சொல்லி ஆணாதிக்கத்தை இன்னும் வலுப்படுத்தாமல் கவிதை என்னும் ஆயுதத்தை இன்னும் கூர்மையாக வைக்க வேண்டிய தேவை எழுந்தது. ஆனால் உடல் அரசியல் என்றாலே இங்கே காமத்தை எழுதுகிறார்கள் என்று தட்டையாகத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். பெண் உடலைச் சிதைக்கும் மனப்பான்மை உலகெங்கும் ஒன்று போல் இருக்கிறது. பெண்ணுடைய உடல் போகத்திற்கானது அல்ல. அவள் உடலும் உள்ளமும் ஒருசேர விடுதலை அடைவது தான் சமூக மாற்றத்திற்கான வழி என்பதால் இவற்றை வெளிப்படையாகப் பேசவேண்டிய தேவை எழுகிறது. சாதித் தூய்மை, குடும்பத் தூய்மை அனைத்தும் பெண் உடலில் இருப்பதாக இங்கே கட்டமைக்கப்பட்டிருக்கிறது''[7] என்று குறிப்பிடுகிறார். இதுவே அவரது கவிதைகளின் ஆயுதமாக அமைகிறது. பெண் உடலை இங்கு இயற்கைச் சூழலோடு கூர்மைப்படுத்திக் காட்டியிருக்கிறார்.

**பசுமை இலக்கிய மரபு**

பண்டைத் தமிழ்க் கவிதையியலில் சூழலுக்கும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி மரபுவழி அறியலாம். பசுமை இலக்கியம் (Green Literature) எனப் பண்டைய இலக்கியங்களை வழங்குவர். ''மண்ணுக்கும் நீருக்கும் உள்ள உறவு, மண்ணுக்கும் காற்றுக்கும் உள்ள உறவு, மண்ணுக்கும் வெப்பத்திற்கும் உள்ள உறவு என்பதோடு இல்லாமல் மண்ணுக்கும் மரம், விலங்குகள், மனிதர்கள் என்று பல உயிரினங்களுக்கும் உள்ள உறவுகள் வளர்ந்து ஒரு கெழுமைப்பாடு (Complexity) ஏற்பட்டுவிடுகிறது. இதனால் அந்தந்த நிலத் தோற்றத் தனித்தன்மைகள் உருவாகி ஒழுகலாறுகளிலும் தனித்தன்மை வந்துவிடுகிறது''[9] என்று பாமயன் குறிப்பிடுகிறார். தீண்டப்படாத முத்தம் என்னும் கவிதைத் தொகுதியில் இடம்பெறும் முதல் முத்தம் என்னும் கவிதையில்,

**தனித்த வேப்பம்பழத்திலிருந்து**
**வெளிநேரும் விதையென**
**என்னிலிருந்து நீங்குகிறது வெட்கம்**
**நீயும் அறங்களனைத்தும் அழிய**
**சாய்ந்த மரத்தின் வேராகி நிற்கிறாய்**

**உன்மத்தம் வடியுமுன் வேர்கள்**
**என்நிலம் நோக்கி நகர**
**ஆழத்தில் புதைந்திருக்கும் நாளங்கள்**
**ஊமத்தைகள் ததும்புகளாகின்றன.**
**கள்ளியின் முட்கள் உள்ளிறங்கப்**
**பீறிடும் இரத்தத் துளிகளாய்**
**என் உடல் முழுவதும்**
**உருள்கின்றன காமத்தின் முத்துக்கள்**
**உன் சுடுமூச்சுகளின் நூல் கொண்டு**
**ஒவ்வொன்றையும் கோக்கிறாய்**
**தொங்கும் தோட்டமாகி மிதக்கிறேன்**
**பறவைகளற்ற வானம் பிரகாசமடைய**

என்ற கவிதையில் மனித நடத்தையாலும் உடல்சார் பாலியல் குறியீடுகளாலும் பொருள் கணம் அமைத்திருக்கிறார்.

**பருவங்கள் வாய்த்த என்னுடல்**
**………..**
**விதையின் அடியிலிருந்து உரக்கப்பாடு**
**முலைகள் விருட்சங்களாகி வெகுகாலமாயிற்று**

என்ற கவிதையில் பெண் உடல் மீண்டும் மீண்டும் இயற்கைக்கும் பூமிக்கும் தொடர்புபடுத்தப்பட்டிருக்கிறது.

**குறுஞ்செடிகள் மண்டிய நிலையில்**
**பெருகுகிறது ஒரு நதி**
**…….**
**என் உடலாகிறது**

என்ற கவிதையில் இயற்கைக் குறியீடாகிறது. உடலினை ஆகாயத்திற்கும் மனதினை நிலத்திற்கும் இடையிலான வெளியில் உருவாகின்ற உணர்வுகளின் தீவிரம் கொண்ட கவிதைகள் இவை என்கிற கவிஞர் சுகுமாரின் வரிகள் இங்கு நினைவுகூரத் தக்கது.

## முடிவுரை

நிலம், உடல், வளமை, வறட்சி, குறியீடு எனச் சூழலியலோடு இணைத்துக் கவிதையில் ஆற்றல் மிக்க சொற்களால் நவீனக் கவிதைத் தளத்தில் தனக்கெனத் தனி இடம் வகிப்பவர் கவிஞர் சுகிர்தராணி. இலக்கியத்திற்கும் இயற்கைக்குமான உறவுகள் பன்னெடும் காலமாகத் தொடர்ந்து தற்காலத்தில் தீவிரமடைந்துள்ளன. மேலும் மானுடத்தை இயற்கை நோக்கித் திருப்புதல் என்ற சூழலியல் கொள்கை சூழலியல் பெண்ணியக் கவிதை மரபை மேம்படுத்துகின்றன.

## அடிக்குறிப்பு

1. ரெங்கம்மாள் இரா மற்றும் வாசுகி சி (2005). பெண்ணிய அணுகுமுறைகளும் இலக்கியப் பண்பாடும், அறிவுப் பதிப்பகம் சென்னை 14, பன்னாட்டுத் தரப் புத்தக எண்: 81-88048-28-3. ப.7,
2. தொல்காப்பியம் பொருளதிகாரம் (2018). இளம்பூரணர் உரை, நூற்பா.14, சாரதா பதிப்பகம்,15ஆம் பதிப்பு.
3. தொல்காப்பியம் பொருளதிகாரம் (2018). இளம்பூரணர் உரை, நூற்பா.3, சாரதா பதிப்பகம்,15ஆம் பதிப்பு
4. இரத்தினக்குமார் ந (2016). திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும், கயல்கவின் பதிப்பகம், முதல் பதிப்பு பன்னாட்டுத் தரப் புத்தக எண்: 978-93-85109-59-1, ப.29,
5. இரத்தினக்குமார் ந (2016). திறனாய்வுக் கோட்பாடுகளும் பன்முக வாசிப்புகளும், கயல்கவின் பதிப்பகம், முதல் பதிப்பு பன்னாட்டுத் தரப் புத்தக எண்: 978-93-85109-59-1, ப.30,
6. பாமயன் (2012). திணையியல் கோட்பாடுகள், ப.31, தடாகம் சென்னை -14

7. திண்ணை (2022). இணைய வாரப் பத்திரிகை-9, அக்டோபர்
8. சொல்வனம் (2022). இதழ்-280,09-அக்டோபர்
9. சுகிர்தராணி (2016). தீண்டப்படாத முத்தம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் 629001.
10. சுகிர்தராணி (2002). கைப்பற்றி என் கனவு கேள், பூங்குயில் பதிப்பகம்,